தினமணி

04.01.2014

ஜன. 6-ல் வாடிக்கையாளர் சேவை பயிலரங்கம்

சங்கர நேத்ராலயா அகாதெமி சார்பில் "வாடிக்கையாளர் சேவை' குறித்த பயிலரங்கம் வானகரத்தில் திங்கள்கிழமை (ஜனவரி 6) நடைபெறவுள்ளது.

இது குறித்து சங்கர நேத்ராலயா அகாதெமி வெளியிட்டுள்ள செய்தி:

வாடிக்கையாளர் சேவை, எந்த ஒரு நிறுவனத்துக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இதனை கருத்தில் கொண்டு வாடிக்கையாளர் சேவை, வாடிக்கையாளர் பிரச்னைகளை தீர்ப்பது மற்றும் நல்லெண்ணங்களை மேம்படுத்துவதற்கு உதவி செய்யும் வகையில் இந்த பயிலரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதி இலவசம். ஆனால் முன்பதிவு செய்துகொள்வது அவசியமாகும்.

முன்பதிவு மற்றும் விவரங்களுக்கு: ஏ.மகாலிங்கம், அகாதெமி அலுவலர், சங்கர நேத்ராலயா அகாதெமி, செல்பேசி: 97104 85295.

http://www.dinamani.com/edition_chennai/chennai/2014/01/04/ஜன.-6-ல்-வாடிக்கையாளர்-சேவை-பய/article1981735.ece